# அறிவித்தல்

## இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் 2019(2020)

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் 2019(2020) இற்கு ஒவ்வொரு பாடங்களின் கீழும் பொது நேர்முகப் பரீட்சைக்காக ஆட்சேர்ப்பு அறிவித்தலின் பிரகாரம் பாடங்களுக்கு அமைய தகுதி பெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களது பெயர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் திகதிகள் மற்றும் அதற்குரிய ஏனைய விபரங்கள் இந்த இணையத்தளத்தில் தற்போது பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்த பெயர் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பது/ பொது நேர்முகப் பரீட்சைக்கு தகுதி பெற்றிருப்பது மாத்திரம் உரிய நியமனத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையல்ல.

இங்கு இணைப்பு *01* ஆக தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை பொது நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்கள் பூரணப்படுத்தி நேர்முகப் பரீட்சை சபையினரிடம் கையளிப்பது கட்டாயமாகும். அத்துடன் அது பல்கலைக்கழக பதிவாளரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். **பொது நேர்முகப் பரீட்சையின் போது தங்களது அனைத்து பட்டங்கள், பட்டப் பின் பட்டங்கள், பட்டப் பின் டிப்ளோமாக்களுக்காக இந்த மாதிரிப் படிவத்திற்கமைய உரிய பட்டப் பாடநெறியில் உள்ளடங்கியுள்ள பாட அலகுகளின் எண்ணிக்கை உறுதிப்படுத்தப்பட்டு முன்னிலைப்படுத்தப்படுவது கட்டாயமாகும் என்பதாலும்** இந்த மாதிரிப் படிவம் பின்னராக சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதாலும் இதனை இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து உடனடியாக பூரணப்படுத்திக் கொள்வது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.